**மனித உரிமை**
**சட்ட ஆதரவு நிலையம்**

Centre for Equality Rights in Accommodation
Centre pour les droits à l'égalité au logement

# ஒன்ராறியோவின் புதிய மனித உரிமை செயல்பாடுகள்

## வதிவிடம் சம்பந்தமான உரிமைகளை நிலை நிறுத்துவதில் உறுதியாய் இருங்கள்

### ஒன்ராரியோ மனித உரிமை கோட்பாடு

ஒன்ராரியோவில் வசிக்கும் ஒவ்வொருவரின் உரிமைகளையும் *மனித உரிமை கோட்பாடு* வரையறுக்கிறது. இக்கோட்பாட்டிற்கிணங்க ஒவ்வொருவரும் பாகுபாடின்றி தமது உரிமைகளை பெற்றுக்கொள்ளலாம்.

இக் கோட்பாடு நீங்கள் பல இடங்களில் பாகுபாட்டை உணராதவாறு பாதுகாக்கின்றது. அதவது:

உங்கள் வேலைத் தலங்களில்
உணவகம் அல்லது திரை அரங்கம் போன்ற பொது இடங்களில்
வேலை தேடும் பொழுது
வதிவிடங்களைத் தேடும் பொழுது
உங்களது வதிட உரிமையாளருடன் தொடர்பு கொள்ளும் பொழுது
சுகாதார அல்லது கல்வி சம்பந்தமான அரசாங்க சேவைகளைப் பெறும் பொழுது

**பாகுபாடு வேற்றுமை பாராட்ட வேண்டும் என்று நிகைக்காத போதும் ஏற்டலாம்.** தங்களை அறியாமலே ஒருவர் உங்களை வேற்றுமைப்படுத்தலாம்.

**பாகுபாடு பல விதங்களில் ஏற்படலாம்** உங்களது வதிவிடச் சொந்தக்காரரோ, தொழில் அதிபரோ, அல்லது சேவை வழங்குபவரோ கீழ்கண்ட காரணங்களுக்காக உங்களை தகாத முறையில் நடத்தினாலோ, உங்களுக்கான சலுகைகளை தர மறுத்தாலோ அல்லது உங்களை ஏதாவது ஒருவகையில் அசௌகரிய படுத்தினால்:

வயது
குடியுரிமை அல்லது பூர்வீகம்
விவாக அல்லது குடும்ப அந்தஸ்து
பால், இனம் அல்லது பாலியல் வெளிப்பாடு
இயலாமை
சமயம்
சாதி, நிறம், இனஅடிப்படை அல்லது பூர்வீகம்
அரசாங்க நிதி உதவி பெறுவோர் (வதிவிடம் சம்பந்தமானவர் மட்டும்)
குற்றப்பட்டியல் (தொழில் சம்பந்தமானவை மட்டும்)

### வதிவிடம் சம்பந்தமான வேற்றுமை அல்லது பாகுபாட்டிற்கான உதாரணங்கள்

வயது: மாணவர்கள் சத்தம் வைப்பார்கள் என நினைத்து வதிவிடத்தை வாடைக்கு விடாது மறுத்தல்

குடிஉரிமை அல்லது பூர்வீகம்: புதிய குடிவரவாளர் என்ற காரணத்திற்காக வாடகை வீட்டிற்கு மனுச்செய்யும் பொழுது வேறுபட்ட விண்ணப்ப படிவத்தை பூர்த்தி செய்ய வேண்டும் எனக்கேட்பது, உதாரணமாக உங்களுக்காக இன்னொருவர் பிணை–கைச்சாத்திட வேண்டும் என்று நிபந்தனை விதித்தல்

குடும்ப அந்தஸ்து: "வயது வந்தவர்களுக்கு மட்டும்" என்று வாடகையாளர் விளம்பரம் பண்ணியிருந்தால் அது பிள்ளைகள் உள்ளவருக்கு எதிரான பாகுபாடாகும்.

விவாக அந்தஸ்து: நீங்கள் மிக அண்மையில் விவாகரத்து புரிந்த பெண் என்பதோடு உங்கள் வருமானம் நிரந்தரமற்றது என்று வீட்டுச்சொந்தக்காரர் உங்களுக்கு வீட்டை வாடகைக்கு தர மறுத்தல்.

பால் அல்லது இனம்:: கருவுற்ற தாய்மாருக்கு வாடகை மனுப்பத்திரத்தை தர மறுத்தல்

இயலாமை: உங்கள் உடல் அல்லது உள இயலாமை என்பவற்றிக்கான தேவைகளை பூர்த்தி செய்யாதுவிடல். உதாரணமாக நீங்கள் சக்கர நாற்காலி உபயோகிப்பவராயிருப்பினும் குளியல் அறையில் அதற்கான வசதிகளை செய்ய மறுத்தல்

அரசாங்க அல்லது பொது நிதி உதவி பெறுபவராய் இருந்தால்: வீட்டு வாடகையாளர் ''வேலை செய்பவருக்கு'' முன்னுரிமை என்ற விளம்பரபடுத்துவதோடு அரசாங்க அல்லது பொது நிதி உதவி பெறுவோருக்கு நேரடியாக பணம் செலுத்தவேண்டும் அல்லது பிணை-கைச்சாதிட ஒருவர் வேண்டும் என்று மேலதிக நிபந்தனைகளை விதிக்கும் பொழுது

**புதிய மனித உரிமை செயல்பாடுகள்**
ஆனி 30, 2008 தொடக்கம் ஒன்ராறியோ வாசிகள் புதிய முறையில் வேறுபாடு அல்லது பாகுபாட்டினை முகம் கொள்ள முடியும். இப்புதிய செயல்பாடு மூன்று பகுதிகளைக் கொண்டது:

**ஒன்ரறியோ மனித உரிமை நியாய சபை**

நீங்கள் பாகுபாட்டை அனுபவித்தவர் என நம்பினால் **நேரடியாகவே** ஒன்ராறியோ மனித உரிமை நியாய சபைக்கு மனு செய்யலாம். விண்ணப்ப பத்திரங்களை அல்லது மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்ள நியாய சபையுடன் தொடர்பு கொள்ளுங்கள்:

**தொலை பேசி: 416-314-1312**
**இலவச இணைப்பு: 1-866-598-0322**
**www.hrto.on.ca**

**மனித உரிமை சட்ட ஆதரவு நிலையம்**

நியாய சபைக்கு விண்ணபம் செய்ய வேண்டுபவர்களுக்கு இலவச சட்ட ஆதரவு சேவைகளை வழங்குவதற்காக பொது நிதி உதவியுடன் மனித உரிமை சட்ட ஆதரவு நிலையம் உருவாக்கப்பட்டுள்ளது. இலவச சட்ட உதவிகளை பெற்றுக்கொள்ள நிலையத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்:

**தொலைபேசி: 416-314-6266**
**இலவச இணைப்பு: 1-866-625-5179**
**www.hrlsc.on.ca**

**ஒன்ராறியோ மனித உரிமை சபை**

ஒன்ராறியோ மனித உரிமை சபை மனித உரிமைகளை ஆய்வுகள் மூலமும், பொது அறிவை வளர்பதன் மூலமும் பொதுவான மனித உரிமை பேணுவதற்கான வழிமுறைகளை அதிகரிபதற்காகவும் செயல்பட்டு வருகின்றது. தொடர்புகளுக்கு:

**தொலை பேசி: 416-326-9511**
**இலவச இணைப்பு: 1-800 387-9080**
**www.ohrc.on.ca**

## புதிய விண்ணப்ப முறைகள்

**தமது உரிமைகள் பாதிக்கப்பட்டதாக உணரும் ஒவ்வொருவருக்கும் உதவும் நோக்கததுடன் மனித உரிமை நியாய சபை புதிய விதிகளை உருவாக்கி உள்ளது.**

நிலை 1: விண்ணப்தை சமர்ப்பித்தல்

பாகுபாட்டினை அனுபவித்த **ஒரு வருட காலதிற்குள்** உங்கள் விண்ணபத்தை சமர்பிக்கலாம்.

உங்கள் சார்பில் விண்ணப்பத்தை சமர்பிக்கும்படி ஏதாவது ஒரு ஸ்தாபனத்தை நீங்கள் வேண்டிக் கொள்ளலாம்

உங்கள் விண்ணப்பத்தில் உங்கள் அனுபவங்கள் உங்கள் சொந்த வார்தைகளினாலேயே விபரிக்கப்பட வேண்டும்.

உங்கள் விண்ணப்பத்தில் வேறுபாட்டை அத்தாட்சிப்படுத்தும் பத்திரங்களோடு அதற்கான சாட்சியாளர்களின் இருந்தால் அவர்கள் பெயர்களும் இணைக்கப்பட வேண்டும்

நிலை 2: விண்ணப்பத்திற்கான பதில்

உங்களுக்கு வேற்றுமை காட்டிய ஒருவரோ அல்லது ஸ்தாபனமோ தமது சொந்த வார்த்தையால் விண்ணபத்திற்கு பதில் அளிக்கும் தருணம் வழங்கப்படும்.

நிலை 3: மனித உரிமை நியாய சபை

உங்கள் பாகுபாட்டிற்கான **தீர்வை** கண்டடைய நியாய சபை உதவும்.

உங்கள் இருவருக்கும் **பரிந்துரையாடலுக்கேதுவான** தெரிவுகளை வழங்குகிறது. மனித உரிமை நிபுணர் உங்களுக்கும் உங்கள் வீட்டுச் சொந்தக்காரருக்கோ அல்லது தொழில் அதிபருக்கோ இடையில் மனமிசைந்த தீர்வைக்கண்டு கொள்ள உதவுவார்.

உங்கள் அனுபங்களை விளக்குவதற்கான சந்தர்பத்தை வழங்க உங்களை ஒரு **விசாரணைக்கும்** அழைக்கலாம்.

நிலை 4: நியாயசபையின் தீர்ப்பு

உங்கள் இருவரக்கும் இடையே உண்டான உரையாடல் வெற்றி பெறாது போனால் ஒரு விசாரணை மேற்கொள்ளப்படும். பரிந்துரையாடல அல்லது விசாரணை மூலம் உங்கள் உரிமைகள் பாதிக்கப்பட்டது என நியாயசபை கண்டு கொண்டால் உங்களுக்கு:

பாகுபாட்டினால் ஏற்பட்ட அனுபவத்திற்கு பரிகாரமாக உங்களுக்கு பணம்

"பிரத்திகேமான இளப்புக்கள்" காரணமாக நீங்கள் இளந்த பணத்திற்கு பணம், அதாவது அநீதியான முறையில் அதிகரிக்கப்பட்ட வாடகையினால் ஏற்பட்ட இளப்பு

நியாய சபை வதிவிடச் சொந்தக்காரர் வேற்றுமை அல்லது பாகுபாட்டை பற்றிய அறிவை பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற கட்டாய உத்தரவை பிறப்பிக்கலாம்

நியாய சபை பாகு பாட்டை இளைத்தவர் மீண்டும் சட்டத்தை மீறாத வண்ணம் கட்டாய உத்தரவு பிறப்பிக்கலாம்

நிதி உதவி

இந்த புதிய செயல்பாடு முன்னதை விட **அதிகளவு நிதி உதவியை** பெற்றுக்கொள்ள உதவுகின்றது.

இச் செயல்பாடுகள் முடிவடைய எவ்வளவு காலம் முடியும்?

நியாய சபை உங்களுக்கு **ஒரு வருட காலத்திற்குள்** தீர்வை வழங்கலாம். இருப்பினும் உங்கள் பரிந்துரையாடல் மூலம் விரைவாகவே தீர்வைக் கண்டு கொள்ளும் சாத்தியமும் உண்டு.

## CERA ம் HRLSCம் உங்களுக்கு உதவலாம்.

**வதிவிடத்தை கண்டு கொள்வதிலோ அல்லது வைத்துக்கொள்வதிலோ** உங்களுக்கு பாகுபாடு ஏற்பட்டது எனபதை நீங்கள் அனுபவம் மூலம் உணர்ந்தால் வதிவிடம் பெறுவதில் சம உரிமைகளுக்கான நிலையம் (CERA) உங்களுக்கு உதவும். மனித உரிமை சம்பந்தமான விடயங்களுக்கு HRLSC உதவி வழங்கும்.

CERA உங்களுக்கு:

- உங்கள் சட்ட உரிமைகளை குறித்த கேள்விகளுக்கான விடைகளையும் உங்களுககான தெரிவுகளையும் குறித்து கலந்தரையாடவும் உதவும்
- உங்களுக்கு அறிவு புகட்டும் பிரசுரங்களை விநியோகிக்கின்றது
- உங்கள் சார்பில் வதிவிட சொந்தக்காரருடன் உங்கள் கருத்துக்களை பரிமாறி உங்களுக்கு உகந்த தீர்வை காண முயலும்
- ஒன்ராறியோ மனித உரிமை நியாய சபையிடம் விண்ணப்பம் பண்ணுவதற்கான உதவியையும் வழங்குகின்றது

**1-800-263-1139 ext. 22**
**எமது சேவைகள் அனைத்தும் இலவசம்**

**இது உங்களது இல்லம்.**
**உங்கள் உரிமைகளுக்காக**

**உறுதியுடன் நிலைத்திருங்கள்!**
**பாகுபாட்டை நிறுத்துவதற்கு இதுவே ஒரு வழி**

*வதிவிடம் பெறுவதில் 300*
*சம உரிமைகளுக்கான நிலையம் 1987ல் ஸ்தாபிக்கப்பட்டது. இது வதிவிட வசதிகளுக்கான மனித உரிமைகளை அதிகரிக்கும் லாபநோக்கமில்லாத அரச–சார்பற்ற நிறுவனமாகும்*

*மனித உரிமை சட்ட ஆதரவு நிலையம்*
*ஆனி 30. 2008ல் இருந்து ஒன்ராறியோ மனித உரிமை சட்ட சபைக்கு மனுசெய்யும் விண்ணப்பதாரிகளுக்கு இலவச சட்ட சேவைகளை வழங்கும் நோக்கத்துடன் செயல்பட்டு வருகின்றது.*


**மனித உரிமை சட்ட ஆதரவு நிலையம்**
**400 யூனிவசிட்டி அவனியூ, 7வது மாடி**
**ரொறன்ரோ, ஒன்ராறியோ M7A 1X8**
**1-866-625-5179**
**ரொறன்ரோ: 416-314-6266**
**தொலை பேசி தட்டச்சு தொடர்பு 416-314-6651**
**தொலை பேசி தட்டச்சு தொடர்பு இலவச இணைப்பு 1-866-612-8627**

**வதிவிடம் பெறுவதில் சம உரிமைகளுக்கான நிலையம்**
**ரொறன்ரோ அலுவலகம்:**
**340 கொலிஜ் வீதி**
**யுனிற் 101A, பெட்டி 23**
**ரொரன்ரோ M5T 3A9**
**தொலை பேசி: 416-944-0087**
**தொலை பேசி இலவச இலக்கம்: 1-800-263-1139**

**ஒட்டாவா அலுவலகம்:**
**200 மக்லாறன், 2வது மாடி**
**ஒற்றாவா, ஒன்ராறியோ**
**K2P 0L6**

**தொலைநகல்: 416-944-1803**
**ஈ. –மெயில்: cera@equalityrights.org**
**கணணித்தளம்: www.equalityrights.org**